Pradesh about the formation of Dakshina Pradesh comprising Andhra Pradesh, Madras and Mysore States?

THE HON. SRI C. SUBRAMANIAM : No, Sir.

Harijan hostels

*196 *Q.*—SRI P. G. MANICKAM : கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து பதிலளிப்பாரா—

(அ) அரசாங்கத்தாரால் நடத்தப்படும் ஹரிஜன மாணவ விடுதிகளில் எத்தனை விடுதிகள் அரசாங்கக் கட்டிடங்களிலே இருக்கின்றன ?

(ஆ) எத்தனை ஹாஸ்டல்கள் வாடகைக் கட்டிடங்களிலே இருக்கின்றன ?

(இ) வாடகைக் கட்டிடங்களிலே இருக்கும் ஹரிஜன மாணவ விடுதிகளுக்காக 1957–58-ம் ஆண்டில் செலுத்தப்பட்ட வாடகைத் தொகை எவ்வளவு ?

THE HON. SRI P. KAKKAN : (அ) 4.

(ஆ) 54.

(இ) ரூ. 39,731.

SRI P. G. MANICKAM : வாடகைக் கட்டடங்களில் இருக்கும் ஹாஸ்டல்களுக்கு ஆயிரக்கணக்கான ரூபாய் செலவழிக்கப்படுகின்றன. ஆகையால் அரசாங்கம் பொதுஜனங்களிடமிருந்து ஒரு கடனை எழுப்பி அந்தக் கட்டடங்களைக் கட்டுவதற்கு முயற்சி எடுத்துக்கொள்ளுவார்களா ? மேலும் வாடகை கொடுக்கப்படுவதற்குச் செலவிடப்படும் தொகையிலிருந்து வாங்கிய கடனுக்கு வட்டி கட்டுவதற்கும் சௌகர்யம் ஏற்படலாம். அதனால் கடன் வாங்கி கட்டடங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் ஏதாவது திட்டம் செய்வதற்கு முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : அப்பேற்பட்ட எந்த திட்டமும் சர்க்காரிடம் இப்பொழுது இல்லை. எங்கெங்கே கட்டடங்களைக் கட்ட வேண்டுமோ அந்த இடங்களிலெல்லாம் ஹாஸ்டல் கட்டிடங்களைக் கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சி எடுத்துக்கொண்டுதான் வருகிறார்கள்.

SRIMATHI P. K. R. LAKSHMIKANTHAM : அரசாங்கத்தாரால் நடத்தப்படும் ஹரிஜன மாணவிகளின் விடுதிகள் ஹரிஜன் வெல்பேர் ஆபிஸரால் கவனிக்கப்பட்டு வருகிறது. பெண்கள் விடுதிகளைப் பெண்களே இருந்து கவனிப்பதற்கு வேண்டிய வசதிகளைக் கனம் அமைச்சரவர்கள் செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : சில ஹாஸ்டல்களில்தான் அப்படி இருக்கிறார்கள். அதற்காக அதிகாரிகளை நியமிக்க முடியாது.

SRI M. C. MUTHUKUMARASWAMY : இந்த அரசாங்கத்தின் உதவி பெற்று நடத்தப்பட்டு வரும் ஹாஸ்டல்கள் ஐந்து வருஷங்கள் நடந்த பிறகுதான் அதற்கு கட்டட உதவி அளிக்கப்படும் என்று இருக்கிறது. இதைப்பற்றி சாதாரணமாக அந்த ஹாஸ்டல்களுக்கு வருகிறவர்கள் விசிட்டிங் புஸ்தகங்களில் இப்படிப்பட்ட குறை இருக்கிறது என்று எழுதுகிறார்கள். ஆகவே அப்படிப்பட்ட ஹாஸ்டல்கள் இரண்டொரு வருஷங்கள் நடந்தாலேயே அவைகளுக்கு கட்டட கிராண்ட் கொடுப்பதற்கு சர்க்கார் முன் வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN: அப்படி நன்றாக நடத்தப்படும் ஹாஸ்டல்களுக்கு இந்த விஷயமாக பரிசீலனை செய்யப்படும்.

SRI K. ANBAZHAGAN : ஆதிதிராவிட தாழ்த்தப்பட்ட மாணவர்களுக்கான உணவு நிலையங்கள் விடுதிகள் சென்னை மாகாணத்தில் மேலும் பல ஆண்டுகள் நிரந்தரமாக தொடர்ந்து நடக்க வேண்டிய நிலை

12th September 1958]

யிருப்பதால் அவைகளுக்குக் கட்டிடங்கள் கட்டுவதற்கு உதவி செய்ய மத்திய அரசாங்கத்திற்கு இந்த அரசாங்கம் விண்ணப்பம் செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதைப் பற்றி தனியாக கேள்வி கேட்க வேண்டும்.

SRI M. K. SOMASUNDARAM : ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிகமான மாணவர்கள் படிக்க வேண்டியதாக இருப்பதால் சர்க்காரிலேயே தலைமை ஜில்லாவில், அதாவது ஹெட்குவார்ட்டர்களிலேயே, பெரிய ஹாஸ்டல் களைக் நிரந்தரமாகக் கட்டுவதற்கு இந்த அரசாங்கம் முன் வருமா ?

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி பரிசீலனை செய்யப் படும்.

SRI K. B. S. MANI : தஞ்சை ஜில்லாவில் சர்க்கார் பெண் விடுதி ஒன்று இருக்கிறது. அது வாடகைக் கட்டடத்தில் இருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய மாணவிகள் குளிப்பதற்குக்கூட ஷிப்ட் அமைக்கப்பட்டு அவர்கள் மூன்று நாட்களுக்கு ஒரு தடவைதான் குளிக்கப்படுகிற நிலைமை இருக்கிறது. அதை மாற்றி அமைத்து புதிய கட்டடத்தைக் கட்டி அதை சீக்கிரத்திலேயே திறப்பதற்கு சர்க்கார் முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : கட்டட வேலை நடந்து கொண்டிருக் கிறது. கூடிய சீக்கிரத்தில் அது திறக்கப்பட்டுவிடும்.

SRI C. NATARAJA ODAYAR : தாலூகா போன்ற சில இடங்களில் ஹரிஜன ஹாஸ்டல்கள் சில தனிப்பட்ட மானேஜ்மெண்டால் நடத்தப்பட்டு வருகின்றன. அங்கே மோர் சப்ளை செய்யும்போது 40 நயா பைசா என்று சொல்லி பணம் வாங்கிக்கொண்டு நான்கு நயா பைசாவுக் குத்தான் சப்ளை செய்கிறார்கள். இப்படி அங்கே பண மோசடி செய் கிறார்கள். இதை நிறுத்துவதற்கு சர்க்கார் முன் வருவார்களா ?

MR. SPEAKER : ஹரிஜனங்களுக்கு கட்டடம் கட்டுவதைப்பற்றி தான் மூல கேள்வியில் இருக்கிறது. பண மோசடியைப்பற்றி இல்லை. அதனால் தனியாக கேள்வி கேட்க வேண்டும். இந்தக் கேள்வி எழாது.

It is not correct to bring in individual grievances like this before this House. Anyway if the Hon. Minister is prepared to answer the question, I have no objection.

THE HON. SRI P. KAKKAN : அங்கே எப்படி மோசடி நடக்கிறது என்று அரசாங்கத்திற்கு தகவல் கொடுத்தால் அதைப்பற்றி கவனிக்கப் படும்.

SRI T. IRUSAPPAN : மாகாணத்தில் ஹரிஜன பெண்களுக்கு உணவு விடுதிகள் தனியாக எங்கெங்கே இருக்கின்றன. எவ்வளவு விடுதி கள் இருக்கின்றன, என்பதை கனம் அமைச்சர் அவர்கள் தெரிவிப்பாரா ?

THE HON. SRI P. KAKKAN : கனம் அங்கத்தினர் இதைப்பற்றி தனிக் கேள்வி போட்டால் தனியாக எவ்வளவு இருக்கின்றன என்ற விவரத்தைக் கொடுக்கிறேன்.

SRI N. MARUDACHALAM : பெரியநாயகனூர் சின்னத் தடாகம் இருளர் ஹாஸ்டல் ஒரு வருஷ காலமாக நடக்காமல் இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ? அதை மீண்டும் எடுத்து நடத்துவதற்கு முயற்சி எடுப்பார்களா ?

THE HON. SRI P. KAKKAN : அரசாங்கம் அதை இந்த வருஷம் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள்.

Sri V. K. KOTHANDARAMAN : பெண்கள் தலைமை தாங்கி நடத்த வேண்டும் என்று சொல்கிற காலத்தில், போளூர் கேசவபுரத்தில் ஒரு பெண் நவநீதம்மாள் என்பவள் நடத்தக்கூடிய ஒரு விடுதி 1953-வது வருஷம் முதற்கொண்டு நடைபெற்று வருகிறது, கிராண்டும் கேட்டு வருகிறார்கள். அந்த ஹாஸ்டலை நமது முதல் மந்திரியும், விவசாய மந்திரியும் நேரில் சென்று பார்த்து இரண்டு பேர்களும் விசிட்டிங் புஸ்தகத்தில் பெருமையாகவும் எழுதியிருக்கிறார்கள். அப்படியிருந்தும் இது வரையிலும் அதற்கு கிராண்டு அனுமதிக்கப்படவில்லை. பெண் என்கின்ற காரணத்தாலா என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

Mr. SPEAKER : இந்தக் கேள்வி எப்படி வருகிறது என்பது தெரியவில்லை. எவ்வளவு ஹாஸ்டல்களுக்கு கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற கேள்வியில் இது எப்படி வரும் ?

Sri K. VINAYAKAM : ஹரிஜனங்களுக்கு ஹாஸ்டல்கள் கட்டுவது வரவேற்கத் தக்கதுதான். அது வரவேற்கத்தக்க கொள்கையானாலும் இந்த ஹாஸ்டல்களில் பிற்பட்ட இனத்தவர்களை அனுமதி பெற்று சேர்த்துக் கொண்டால் எத்தனை பெர் சென்ட் பிற்பட்ட இனத்தவர்களைச் சேர்த்துக் கொள்ளுவார்கள் ?

The Hon. Sri P. KAKKAN : நூற்றுக்கு 15 மாணவர்கள் வீதம் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

Srimathi A. S. PONNAMMAL : மதுரை ஜில்லாவில் உள்ள ஹாஸ்டலில் போதிய அளவு ஹரிஜன மாணவர்கள் இல்லை. ஆதலால் அந்த ஹாஸ்டலை ஹரிஜன சேவா சங்கத்துடன் 'அட்டாச்' செய்து அரசாங்கம் ஏதாவது வழி வகை செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன் ?

Mr. SPEAKER : இந்தக் கேள்வி தனிப்பட்ட ஜில்லாவைப் பொறுத்து இருக்கிறது. அதனால் இப்படிப்பட்ட கேள்வியை இந்தக் கேள்விக்கு உப கேள்வியாகக் கேட்க வேண்டாம்.

Mr. SPEAKER : Questions 197, 198 and 203-A will be taken up together.

Sri A. A. RASHEED : Sir, what about the answer to question No. 192?

The Hon. Sri C. SUBRAMANIAM : I have already answered that question, Sir.

Mr. SPEAKER : Question No. 192 has been answered.

Sri K. VINAYAKAM : What is the answer to that question, Sir?

Mr. SPEAKER : It cannot be repeated.

The Hon. Minister will now answer questions Nos. 197, 198 and 203-A.

Pearl fishery

* 197 *Q.*—Sri M. JAGANNATHAN : Will the Hon. the Minister for Local Administration be pleased to state—

(*a*) whether any pearl fishery operations are carried on at Tuticorin;

(*b*) the estimated number of oysters in the sea-bed in that area;

(*c*) the actual number of oysters fished so far; and

(*d*) the total revenue realized from them?